சார்பு நீதிமன்றம் அரூர், தருமபுரி மாவட்டம்

முன்னிலை : - **திரு.R.விஜயன்,M.A.,B.L.,**

சார்பு நீதிபதி, அரூர்

2025 ம் ஆண்டு நவம்பர் திங்கள் 06 ம் நாள் வியாழக்கிழமை

**இ.நி.ம.எண்.3/2025**

**இன்**

**மோ.கோ.அ.ம.எண்.53/2020**

The Branch Manager,
Bajaj Allianz General Insurance Company Ltd.,
Salem.

. ... மனுதாரர்/2 ம் எதிர்மனுதாரர்

**// எதிராக //**

1. லட்சுமி
2. ஹரிணி
3. ஹரிஹரன்
4. அருள்மொழி

... எதிர்மனுதாரர்கள்/மனுதாரர்கள்

இந்த மனு இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு, என் முன்பாக 23.10.2025 ம் தேதியன்று விசாரணைக்கு கொண்டு வரப்பட்டு, மனுதாரர்/2 ம் எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.ஜெ.சத்தியநாராயணன்,பி.ஏ.,பி.எல்., அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர்கள்/மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.ஜி.இராதாகிருஷ்ணன்,எம்.காம்.,பி.எல்., அவர்கள் ஆஜராகி இந்த மனுவை அனுமதிப்பதில் எந்த ஆட்சேபனையும் இல்லை என்று மேல்எழுத்து செய்துள்ளார். மனுதாரர் தரப்பு வாதுரையை கேட்டும், ஆவணங்களை பரிசீலினை செய்தும், இன்று இந்நீதிமன்றம் கீழ்க்கண்டவாறு வழங்கும்:

**உத்தரவு**

1. மனுதாரர்/2 ம் எதிர்மனுதாரர் அசல் மனுவில் சாட்சிப் பட்டியலை தாக்கல்



R VIJAYAN Digitally signed by R VIJAYAN Date: 2025.11.06 17:04:56 +0530

செய்வதில் ஏற்பட்ட காலதாமதத்தை மன்னித்து, இம்மனுவுடன் இணைக்கப்பட்ட மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள சாட்சியை விசாரணைக்கு அனுமதித்து தக்க உத்தரவு பிறப்பிக்க வேண்டி உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 16 விதி 1ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. **<u>மனுதாரர்/2ம் எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்த மனு மற்றும் பிரமாண வாக்குமூலத்தின் சுருக்கம்:-</u>**

(i) தான் முதன்மை M.C.O.P.No.53/2020 வழக்கில் மனுதாரர்/2ம் எதிர்மனுதாரர் சார்பில் வழக்கறிஞராக உள்ளேன். எனவே, இம்மனுவின் உண்மை நிலைமைகளை நன்கு தெரியும்.

(ii) மேலே குறிப்பிடப்பட்ட மனுதாரர்கள்/எதிர்மனுதாரர்கள், 20.11.2019 அன்று நிகழ்ந்ததாகக் கூறப்படும் விபத்தில் Regn.No.TN-52-L-1489 என்ற வாகனத்தை ஓட்டி சென்றதாகக் கூறப்படும் மூன்றாம் நபர் உயிரிழந்ததற்காக, காப்பீட்டு நிறுவனத்திடமிருந்து இழப்பீடு தொகை பெறுவதற்காக இம்மனுவை தாக்கல் செய்துள்ளனர்.

(iii) தான் சாட்சிப் பட்டியலை உரிய காலத்தில் தாக்கல் செய்யாதது, தவறுதலாலும் கவனக்குறைவாலும் ஏற்பட்டது என்பதை தாழ்மையுடன் சமர்ப்பிக்கிறேன். தனது வழக்கை நிரூபிப்பதற்காக, இம்மனுவுடன் இணைக்கப்பட்ட மனுவில் குறிப்பிட்டுள்ள சாட்சியை தான் பரிசீலனைக்கு அழைக்க விரும்புகிறேன். அவர்களின் சாட்சி, வழக்கை நியாயமான முறையில் தீர்மானிப்பதற்கு மிகவும் அவசியமானது. சாட்சிப் பட்டியல் தாக்கல் செய்வதில் ஏற்பட்ட தாமதம் முற்றிலும் தவறுதலானது. எனவே, இம்மனுவின் சூழ்நிலைகளைக் கருத்தில் கொண்டு, சாட்சிப் பட்டியலை தாக்கல் செய்வதில் ஏற்பட்ட தாமதத்தை மன்னித்து, இம்மனுவுடன் இணைக்கப்பட்ட மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள



R VIJAYAN
Digitally signed by R VIJAYAN
Date: 2025.11.06 17:05:00 +0530

சாட்சியை விசாரணைக்கு அனுமதித்து, இந்நீதிமன்றம் தகுந்த உத்தரவை பிறப்பிக்குமாறு தாழ்மையுடன் வேண்டிக்கொள்கிறேன் என்று தனது மனுவில் கூறியுள்ளார்.

3. எதிர்மனுதாரர்கள்/மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜராகி இந்த மனுவை அனுமதிப்பதில் எந்த ஆட்சேபனையும் இல்லை என்று மேல்எழுத்து செய்துள்ளார்.

4. **இம்மனுவில் தீர்மானிக்கவேண்டிய பிரச்சினை யாதெனில், இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதேயாகும்.**

**தீர்வு** : -

5. மனுதாரர்/2 ம் எதிர்மனுதாரர் அசல் மனுவில் சாட்சிப் பட்டியலை தாக்கல் செய்வதில் ஏற்பட்ட காலதாமதத்தை மன்னித்து, இம்மனுவுடன் இணைக்கப்பட்ட மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள சாட்சியை விசாரணைக்கு அனுமதித்து தக்க உத்தரவு பிறப்பிக்க வேண்டி உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 16 விதி 1 ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

6. இருதரப்பும் கேட்கப்பட்டது. மனுதாரர்/2 ம் எதிர்மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனு மற்றும் ஆவணங்கள் கவனத்துடன் பரிசீலினை செய்யப்பட்டது. மனுதாரர்/2 ம் எதிர்மனுதாரர் மேற்படி தான் சாட்சிப் பட்டியலை உரிய காலத்தில் தாக்கல் செய்யாதது, தவறுதலாலும் கவனக்குறைவாலும் ஏற்பட்டது என்பதை தாழ்மையுடன் சமர்ப்பிக்கிறேன் என்றும், தனது வழக்கை நிரூபிப்பதற்காக, இம்மனுவுடன் இணைக்கப்பட்ட மனுவில் குறிப்பிட்டுள்ள சாட்சியை தான் பரிசீலனைக்கு அழைக்க விரும்புகிறேன் என்றும், அவர்களின் சாட்சி, வழக்கை நியாயமான முறையில் தீர்மானிப்பதற்கு மிகவும் அவசியமானது. சாட்சிப் பட்டியல் தாக்கல் செய்வதில் ஏற்பட்ட தாமதம் முற்றிலும் தவறுதலானது என்றும், எனவே, இம்மனுவின் சூழ்நிலைகளைக் கருத்தில் கொண்டு, சாட்சிப் பட்டியலை தாக்கல் செய்வதில் ஏற்பட்ட தாமதத்தை மன்னித்து, இம்மனுவுடன்



R VIJAYAN
Digitally signed by R VIJAYAN
Date: 2025.11.06 17:05:04 +0530

இணைக்கப்பட்ட மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள சாட்சியை விசாரணைக்கு அனுமதித்து, இந்நீதிமன்றம் தகுந்த உத்தரவை பிறப்பிக்க வேண்டி இம்மனுவை தாக்கல் செய்யப்பட்டதாக தெரிவித்துள்ளார்.

7. மனுவில் குறிப்பிட்டுள்ள சங்கதிகள் கவனமாக பரிசீலனை செய்யப்பட்டது. மனுதாரர்/2 ம் எதிர்மனுதாரர் இந்த மனுவை தாக்கல் செய்து ஆந்திரபிரதேசம் மாநிலம், பர்னூர் மாவட்டம், தானே காவல் நிலைய குற்ற எண்.298/2019 வழக்கின் புலன் விசாரணை அதிகாரிக்கு அழைப்பாணை அனுப்பி வழக்கின் Case Diary மற்றும் குற்ற இறுதி அறிக்கை நகல் தாக்கல் செய்து சாட்சியமளிக்க கோரியுள்ளார். மனுதாரர்/2 ம் எதிர்மனுதாரரே சாட்சியாக ஆஜர்படுத்த வேண்டும் என்று கோரியுள்ள ஆவணங்களை உரிய நீதிமன்றத்தில் உரிய சான்றாவணங்கள் பெற்று தாக்கல் செய்ய முடியும். அவ்வாறு இருக்கும்போது மேற்படி குற்ற எண்.298/2019 ன் புலன் விசாரணை அதிகாரி விசாரிக்க வேண்டும் என்று கோருவது ஏற்புடையதாக இல்லை. மேலும் ஒரு குற்ற எண்ணின் புலன் விசாரணை அதிகாரி என்று குறிப்பிட்டு எந்தவொரு நபருக்கும் சாட்சி சம்மன் அனுப்ப முடியாது. குறிப்பான ஒரு பெயருகோ அல்லது குறிப்பான ஒரு பதவியில் இருப்பவருக்கோ மட்டும் தான் சாட்சிக்கான அழைப்பாணை அனுப்ப முடியும். தற்பொழுது மேற்படி குற்ற எண்ணின் புலன் விசாரணை அதிகாரி யார் என்றே தெரியாத நிலையில் புலன் விசாரணை அதிகாரிக்கு அழைப்பாணை அனுப்புவதால் மிகுந்த காலதாமதம் ஏற்படும். ஏற்கனவே இந்த அசல் மனுவானது 2020 ம் ஆண்டு தாக்கல் செய்து 5 வருடங்களுக்கு மேலாக நிலுவையில் இருந்து வருகிறது. இத்தகைய நிலையில் இந்த மனுவை தாக்கல் செய்திருப்பது சட்டப்படி ஏற்புடையதாக இல்லை. எனவே இம்மனு நீதியின் நலனை கருத்தில் கொண்டு தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது.

8. **இறுதியாக,** மனுதாரர்/2 ம் எதிர்மனுதாரர் அசல் மனுவில் சாட்சிப் பட்டியலை



R VIJAYAN

Digitally signed by R VIJAYAN
Date: 2025.11.06 17:05:07 +0530

தாக்கல் செய்வதில் ஏற்பட்ட காலதாமதத்தை மன்னித்து, இம்மனுவுடன் இணைக்கப்பட்ட மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள சாட்சியை விசாரணைக்கு அனுமதித்து தக்க உத்தரவு பிறப்பிக்க வேண்டி தாக்கல் செய்யப்பட்ட இம்மனு தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் உடனுக்குடன் பிழை நீக்கம் செய்யப்பட்ட பின்னர் 2025 ம் ஆண்டு நவம்பர் திங்கள் 06 ம் நாளான இன்று இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

R VIJAYAN
Digitally signed by R VIJAYAN
Date: 2025.11.06 17:05:12 +0530

சார்பு நீதிபதி,

அரூர்.

**<u>இரு தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்</u>** : -

-- இல்லை -

R VIJAYAN
Digitally signed by R VIJAYAN
Date: 2025.11.06 17:05:15 +0530

சார்பு நீதிபதி,

அரூர்.